## ***தமிழர் வரலாறு (சுருக்கம்)***

1505இல் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தார்கள். அப்பொழுது இலங்கையில் கோட்டை, கண்டி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய அரசுகள் இருந்தன.

போர்த்துக்கேயரின் பின் ஒல்லாந்தரும், ஆங்கிலேயரும் இலங்கையை ஆட்சி செய்தார்கள். இதன் காரணமாக 1833இல் மூன்று அரசுகளாக இருந்த இலங்கை ஒரு தேசமாக இணைக்கப்பட்டது. இரண்டாம் உலகப்போர் முடிந்ததும் ஆங்கிலேயர்கள் தங்கள் காலனித்துவநாடுகளை கைவிடத்தொடங்கினர், ஆனால் இலங்கையை 1948இல் தான் கைவிட்டனர். அவர்கள் நாட்டை விட்டு வெளியேறும்போது சிங்களவர்களின் கையில் ஆட்சியை ஒப்படைத்துவிட்டுச் சென்றனர்.

இதன் விளைவாக 10 இலக்கம் மலைவாழ் தமிழ்மக்கள் தங்கள் குடியுரிமையை இழந்தனர், சிங்களம் மட்டுமே இலங்கைத்தீவின் ஆட்சிமொழி என்ற சட்டமும் கொண்டுவரப்பட்டது. இதனால் பல மாணவர்கள் உயர்கல்வி கற்பதற்கு சிரமப்பட்டார்கள். ஏனெனில் அவர்கள் தொடர்ந்து படிப்பதற்கு சிங்களம் கற்றிருக்கவேண்டும். பல்கலைகழகங்களில் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்துபோனது. அதுமட்டுமல்ல, தமிழ் மாணவர்கள் சிங்கள மாணவர்களைவிட அதிக புள்ளிகள் எடுத்தால் மட்டுமே உயர்கல்வி கற்கலாம் என்ற சட்டமும் கொண்டுவரப்பட்டது.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையில், 1972இல், பல புதிய தேசியச் சட்டங்கள் உருவாக்கப்பட்டன. உருவாக்கப்பட்ட எல்லா சட்டங்களும் தமிழ்மக்களுக்கு எதிராகவே இருந்தது.

இலங்கையில் நடந்த கலவரங்களில் பல சிங்களவர்கள் தமிழ் மக்களின் வீடுகளைத் தீமூட்டினார்கள். அதுமட்டுமல்லாமல் பல தொன்மையும் புகழ் பெற்ற நூல்களையும் கொண்ட யாழ்நூலகத்தைக்கூட எரித்தார்கள். கோவில்களிலும், பாடசாலைகளிலும் அகதிகளாக வசித்து வந்த தமிழ் மக்கள் மீது குண்டு வீசினார்கள். இதை எதிர்த்து தமிழ் மக்கள் பலர் அறவழிப்போராட்டங்களும் மறவழிப்போராட்டங்களும் நடத்தினார்கள்.

இன்று வெளிநாடுகளில் பல ஈழத்தமிழர்கள் வாழ்ந்து வருவதனால் வெளிநாடுகள் இலங்கையில் வாழும் ஈழத்தமிழர்களுக்கு உதவுகின்றார்கள். அப்படி

இருந்தும்கூட இலங்கையில் வாழும் பல ஈழத்தமிழர் கொடுமையான சூழலில் வாழ்ந்து வருகின்றார்கள்.

***-ரேவதி***